# கல்லறை தொட்டிலிலே...

கல்லறை தொட்டிலிலே கண்ணுறங்கும் கண்மணிகள் //
காவியத்தின் மடியினிலே கண்மூடித் தூங்குகிறார் //
ஆராரோ ஆரிவரோ ஆர் வயிற்றில் பிறந்தாயோ

ஊர் உறங்கும் வேளையிலும் நாய் – ஊளையிடும் சாமத்திலும் //
கொட்டும் மழை மாரியிலும் கொடும் பனிக் காலத்திலும் //
கண்விழித்துக் காத்திருந்தே கண்மணிகள் மூடியதோ //
எங்களிற்காய் பூத்திருந்த பூ விழுந்து வாடியதோ //
ஆராரோ ஆரிவரோ ஆர் வயிற்றில் பிறந்தாயோ

உன்னூரை நானறியேன் பெற்றவரைத் தானறியேன்
பெற்றவரின் முகம் அறியேன் பேதையென்ன சொல்லி அழுவேன்
தலைவனின் நெஞ்சுக்குள்ளே நின்றெரியும் நெருப்புகளே
தாயகத்தை வென்று தருவோம் நிம்மதியாய் தூங்குங்களே
ஆராரோ ஆரிவரோ ஆர் வயிற்றில் பிறந்தாயோ

– கல்லறைத் தொட்டிலிலே...